## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

*[1990 யூன் மாதம் 12 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*


**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது**

---

**1990, யூன் மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 1.55

## 1990 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

ச. வ.—ஓ 50/89

[1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது]

### 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது. **1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) உட்பந்தி (LIV) என்பதில் "1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின்; அத்துடன்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பந்தி (LV) என்னும் உட்பந்தியில் (III) ஆம் விடயத்தில் "ஐரோப்பிய பொருளாதார சமூக நிதிகளுடன் தாபிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐரோப்பிய பொருளாதார சமூக நிதிகளுடன் தாபிக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பந்தியின் முடிவில் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்;

"(LVI) 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, கமத்தொழிற் காப்புறுதிச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட கமத்தொழிற் காப்புறுதிச் சபையின்,"

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (XVI) என்னும் உட்பந்தியில் "அந்த ஆளினால் கொள்ளப்பட்ட பின்னர் இருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலத்தின்போது நிகழும் மாற்றத்தின்மீதும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஆதனம் அந்த ஆளினால் கொள்ளப்பட்ட தேதியின் பின்னர் இருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலத்தின் போது நிகழும் மாற்றத்தின்மீதும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது. **முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2—ட 008702—1,670 (06/90)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (இஇ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(இஇஇ) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் தேசிய கழகத்தினால் 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய கழகம் ஆற்றிய சேவைகள் தொடர்பில் அல்லது விளையாட்டுக்கள் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் விளையாட்டில் பங்குபற்றும் நெறிமுறையின் போது அந்த வரிமதிப்பீட்டாண்டில் இலங்கைக்கு வெளியே வெளிநாட்டு நாணயத்தில் சம்பாதிக்கப்பட்ட இலாபங்களும் வருமானமும் அத்தகைய இலாபங்களும் வருமானமும் (இலங்கைக்கு வெளியே உறப்பட்ட நியாயமான செலவுகளாக ஆணையாளர் தலைமையதிபதி கருதுகின்றவாறான அத்தகைய தொகையைக் கழித்து) அத்தகைய கழகத்தால் இலங்கைக்கு அனுப்பப்படின்;";

(2) அப்பிரிவின் (3) என்னும் பந்தியில் "ஆளொருவரால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையும் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆளொருவரால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (ப) என்னும் பந்தியில் "ஆளொருவரினால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆளொருவரினால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (ப) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ட) 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவாண்மையொன்றின் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அத்தகைய பணியகத்தால் உரிமமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அல்லது பங்காண்மைக்கு, அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையால் எந்த இலங்கையருக்கு இலங்கைக்கு வெளியே வேலை ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதோ அல்லது பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் இலங்கையர் தொடர்பில் 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் செலுத்தப்பட்ட இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாததான ஏதேனும் பணத்தொகையும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "1984 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதி தொடங்கி 1990 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதி முடிவடையும் காலப்பகுதிக்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1984 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆம் தேதி தொடங்கி, 1991 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதி முடிவடையும் காலப்பகுதிக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 22 ஈஈஈ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துதல்.

6. பின்வரும் பிரிவானது 22 ஈஈ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் இது முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"தொழிற்துணிபு மூலதனத்தை ஏற்பாடு செய்யும் கம்பெனிகளின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமான வரியிலிருந்து விலக்களித்தல்.

22ஈஈஈ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்படும் ஏதேனும் கம்பெனியின் இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்துவரும் இலாபங்களும் வருமானமும் தவிர) அத்தகைய கம்பெனி தொழிலைத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து பத்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் இப்பிரிவின் நோக்கங்களுக்காக, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும், உற்பத்தியில் அல்லது பொருட்களின் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள பொறுப்புமுயற்சிக்கு தொழிற்துணிபு மூலதனத்தை ஏற்பாடுசெய்யும் பொறுப்புமுயற்சியொன்றை மட்டும் கொண்டுநடாத்துவதில் ஈடுபட்டுள்ளதுமான ஏதேனும் கம்பெனிக்கு ஏற்புடையனவாக மாட்டா.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு அப்பிரிவின் (7) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (உஉ) என்னும் பந்தியில் "1981 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1981 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1987 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (உஉஉ) என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில்

(i) "அதன் நிருமாணம் 1987 ஏப்பிறல் 1 ஆம் தேதி யன்று அல்லது அதன்பின்னர் முடிவடைந்தால்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அத்தகைய ஆளினால் நிர்மாணிக்கப்பட்டதும் அதன் நிருமாணம் 1987 ஏப்பிறல் 1 ஆம் தேதி யன்று அல்லது அதன்பின்னர் முடிவடைந்தது மான" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ii) "அதன் நிருமாணச் செலவின்மீது" என்னும் சொற் களுக்குப் பதிலாக "அதன் நிருமாணச் செலவுகள் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(ஆ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின் வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் —

"(iv) 1987 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட் டதும் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வதி விடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கருத் தெல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கூட் டாட்சி ஆதனமொன்றில் அடங்கியுள்ள வதிவற்ற இருப்பிட வசதியின் ஏதேனும் கூறு, அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட வியாபாரத்தில், தொழிலில், உயர்தொழிலில் அல் லது வாழ்க்கைத் தொழிலில் அது பயன்படுத்தப் பட்டதன் காரணமாக அதனைக் கொள்ளலுக்கான விலையின் மீது ஆண்டொன்றுக்கு பத்துச் சத வீதத்திலான விடுதொகையொன்று;"; அத்துடன்

(இ) அப்பந்திக்கான காப்புவாசகத்தில் "அல்லது இப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியின்" என்னும் சொற்களுக்கும் எண் களுக்கும் பதிலாக, "அல்லது இப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியின் அல்லது (iv) ஆம் உட்பந்தியின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத் துடன்

(3) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தை உடனடுத்து மேலும் பின்வரும் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும்;

ஆயின், மேலும், (ஏஏ) என்னும் பந்தியில் குறிப்பிடு செய் யப்படும், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் அல்லது தேசிய அபிவிருத்தி வங்கியால் வாராக் கடன்கள் அல் லது ஐயுறவுக் கடன்களின் தொடர்பில் இப்பந்தியின் கீழ் கழிக் கப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை, விடயத்திற்கேற்ப

அத்தகை கூட்டுத்தாபனத்தின் அல்லது அத்தகைய வங்கியின் (ஏஏ என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட) அந்தந்த பொது ஒதுக்கீடுகளிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும் என்ப துடன் அத்தகைய பொது ஒதுக்கீட்டிலுள்ள தொகைக்கு மேலாக ஏதேனும் பணத்தொகை விஞ்சியிருப்பின் அத்தகைய விஞ்சுதொகை இப்பந்தியின் கீழ் கழிப்பனவு செய்யப்படுத லும் வேண்டும்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்க, தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பந்தியின் பந்தி (ஞ) என்பதனை பந்தி (ட) என மீள எழுத்திடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் பந்தி (ட) என மீள எழுத்திடப்பட்ட அத் தகைய பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்ப தன் மூலமும் :—

"(ண) பிரிவு 32 (2) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதே னும் பணத்தொகையின் கொடுப்பனவுக்கென ஏதேனும் ஒதுக்கீட்டிற்கு அல்லது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட ஏதேனும் பணத்தொகை 23 (1) (ண) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆண்டுக் கொடுப்பன வைத் தவிர).".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "(அ) என்னும் பந்தியில் குறிப் பீடு செய்யப்பட்ட" என்ற சொற்களுக்குப் பதிலாக "(அ) என்னும் பந்தியில் அல்லது (அஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅ) என் னும் பந்தியில் அல்லது (அஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய் யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் VIII ஆனது அந்த அத்தியாயத்தின் தலையங்கத்தில் "வருமானவரி வீதங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வருமான வரி வீதங்களும், வரி வரவுகளும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

முதன்மைச் சட்டவாக்கத் தின் அத்தி யாயம் VIII என் பதன் தலை யங்கத்தைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அதன் பந்தி (iii), பந்தி (iv) பந்தி (v) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின் வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(iii) 1984 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப் பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11அ என்னும் பாகத்தில் ; அல்லது

(iv) 1985 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப் பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டததிற்கான முதலாம் அட்டவணையின் 11ஆ என்னும் பாகத்தில் ; அல்லது

(v) 1986 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின் ஆனால் 1988 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங் கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட் டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11இ என்னும்" அத்துடன்

(vi) 1988 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஈ என் னும்." அத்துடன்

(2) அப்பிரிவின் (3இ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(3இ) எவரேனும் ஆளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமா மானம், அவ்வாளினல் வேறு எவரேனும் ஆளிடமிருந்து கொடை வாயிலாக அல்லது மரபுரிமை வாயிலாகக் கொள் ளப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் சொத் தாண்மை மாற்றத்தினின்றெழும் ஏதேனும் மூலதன சட் டத்தை உள்ளடக்குகின்றவிடத்து. அத்தகைய ஆதனம் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளினல் கொள்ளப்பட்ட தேதியானது இப்பிரிவின் (3அ) என்னும் உட்பிரிவினதும் அல்லது 14 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (xvi) உட்பந்தியின் நோக்கங்களுக்காக, அத்தகைய ஆதனம் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளினல் கொள்ளப் பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தில் 32உ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஈ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் பின்வரும் பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச் சட்டவாக்கத்தின் 32உ என்னும் பிரிவு என்றூற் போன்று பயனுறுதலும் வேண்டும்.

"தொழிலிலிருந்து ஈட்டும் இலாபங்களின் மீது வரிக்கு எதிரான வரி வரவு.

32உ. எந்தத் தனியாளுக்கு 67 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகின்றனவோ அந்தத் தனியாளொருவராக அல்லாதவரும் 1990 ஏப்பி றல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எந்தத் தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் (32) (2) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்ற வாறான அத்தகைய இலாபங்களின் அத்தகைய பாகத் தைத் தவிர) ஏதேனும் தொழிலிலிருந்து ஈட்டப்படும் இலாபங்களை உள்ளடக்குகின்றதோ அந்தத் தனியாளி

னால் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப் படற்பாலதான வருமானத்திலிருந்து, தொளாயிரம் ரூபாவுக்குச் சமனான ஒரு தொகை அல்லது தொழிலிலிருந்து ஈட்டும் அத்தகைய இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரி என்பவற்றுள் எத்தொகை குறைவானதோ அத்தொகை கழிக்கப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் தனியாளின் தொழிலிலிருந்து ஈட்டப்படும் இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரியின் தொகையானது, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்காக அத்தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திற்கு அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் தொழிலிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளனவோ அதே விகிதாசாரத்தை அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளினால் கொடுக்கற்பாலதான வருமான வரிக்கு எந்தப் பணத்தொகை கொண்டுள்ளதோ அந்தப் பணத்தொகையாதல் வேண்டும்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், முப்பது மூன்றோடு மூன்றிலொன்றாகவும்; அத்துடன் என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக 'முப்பது மூன்றோடு மூன்றிலொன்றாகவும் ;' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் 'வரிமதிப்பீட்டு ஆண்டாக இருப்பின் இருபதாகவும்,' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, 'வரிமதிப்பீட்டு ஆண்டாக இருப்பின் இருபதாகவும், அத்துடன்' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

(iii) அந்த வரிமதிப்பீட்டு ஆண்டு 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டாக இருப்பின் பதினைந்தாகவும்';

(ஈ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் ;

"(இ) எந்தப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் மூலதனத்தின் எழுபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாமல் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் பகிரங்கக் கம்பனியின் விடயத்தில், கடன் என்ற வகையிலன்றி, (இதனகத்துப் பின்னர் 'இயைபான வரிமதிப்பீட்டாண்டு' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1986 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான அதன் இலாபங்களிலிருந்து (அ) என்னும் பந்தியின் கீழ் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான வரியை அதிலிருந்து கழித்த பின்னர், அந்த இலாபங்களின் மீதியின் இருபத்தைந்து சதவீதத்திற்குச் சமனான தொகையொன்று ;

ஆயினும், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் 1986 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எந்த இலாபங்கள் மீது கணிக்கப்படுகின்றதோ அந்த இலாபங்களிலிருந்து இயைபான வரிமதிப்பீட்டாண்டில் பகிர்ந்தளிக்கப்படும் எவையேனும் மொத்தப் பங்கிலாபங்களின் கூட்டு மொத்தத் தொகையானது—

(i) அத்தகைய மீதியின் இருபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாதிருக்குமிடத்து இப்பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் ஆகாது ; அத்துடன்

(ii) அத்தகைய மீதியின் இருபத்தைந்து சதவீதத்திற்குக் குறைவாயிருக்குமிடத்து அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனம் இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு எந்த வரிக்குப் பொறுப்பாகின்றதோ அந்த வரியானது, அத்தகைய மீதியின் இருபத்தைந்து சதவீதம் அத்தகைய பங்கிலாபங்களை எந்தத் தொகையினால் விஞ்சுகின்றதோ அந்தத் தொகைக்குச் சமனான ஒரு தொகையாதல் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள், ஆயுட் காப்புறுதித் தொழிலிருந்து அதன் இலாபங்களை உள்ளடக்கமாட்டாதெனக் கருதப்படுதல் வேண்டும்."

(2) அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவில், "விலை கூறிப்பெறப்பட்ட பங்குடைய பகிரங்கக் கம்பனி" என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அப்பங்கிலாபத்தின் அத்தகைய பாகத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலானவாறு", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அப்பங்கிலாபத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலானவாறு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் “ தகைமையளிக்கும் பங்கிலாபமொன்றைக் கொண்டிருக்கின்றவாறு அப்பங்கிலாபத்தின் அத்தகைய பாகத்தின்மீது செலுத்தப்பட்ட முற்பணக்கம்பனி வரியொன்றுக்குச் சமமான தொகையொன்றை” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ அப்பங்கிலாபத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான முற்பணக்கம்பனி வரியொன்றுக்குச் சமமான தொகையொன்றை”, என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

“(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “பங்கிலாபங்களின் தொகையிலிருந்து பங்கிலாபமானது, 1990 மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து மூப்பத்துமூன்றேடு மூன்றிலொரு சதவீதத்துக்குச் சமமான வருமான வரியையும், பங்கிலாபமானது 1980 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து, இருபது சதவீதத்துக்குச் சமமான வருமான வரியையும் கழிக்க உரித்துடையதாதல் வேண்டும் ;” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, பங்கிலாபங்களின் தொகையிலிருந்து—

(அ) பங்கிலாபம், 1980, மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து, மூப்பத்துமூன்றேடு மூன்றிலொரு சதவீதத்துக்கும்;

(ஆ) பங்கிலாபம், 1980 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனல் 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து இருபது சதவீதத்துக்கும் ; அத்துடன்

(இ) பங்கிலாபம், 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து பதினைந்து சதவீதத்துக்கும் ;

சமமான வருமான வரியைக் கழிக்க உரித்துடையதாதல் வேண்டும்;’ அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்;

‘(ஊ) பந்தி (ஈ) என்பதன் உட்பந்தி (ii), அல்லது (iii), அல்லது (iv) என்பதில் குறிப்பீடு செய்யப்படும் பங்கிலாபமொன்றிலிருந்து செலுத்தப்பட்டவாறு அப்பங்கிலாபத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் வேறு வதிவுள்ள கம்பனிகளால் செலுத்தப்பட்ட முற்பணக்கம்பனிவரி’.

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், 'சமமான தொகையொன்றினைக் கழித்தற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்; அத்துடன்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'சமமான தொகையொன்றினைக் கழித்தற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்;' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

'(ஆ) 1980 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு இருபத்தைந்து சதவீதத்தால் அதிகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவரால் செலுத்தற்பாலதான வரியிலிருந்து சொல்லப்பட்ட இருபத்தைந்து சத வீதத்திற்குச் சமமான தொகையொன்றினைக் கழித்தற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்; அத்துடன்'; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

'(இ) 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு பதினேழில் மூன்று சதவீதத்தால் அதிகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவரால் செலுத்தற்பாலதான வரியிலிருந்து சொல்லப்பட்ட பதினேழில் மூன்று சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றினைக் கழித்தற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்;'.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் 'எட்டு (இ) என்னும் நோக்கங்களுக்காக' என்னும் சொற்களுக்குப் பதிலாக 'எட்டு (இ) அத்துடன் 33(1) (இ) என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக', என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XII என்பதில் காணப்படும் தலையங்கத்தை திருத்துதல்.*

17. பிரிவு 85 என்பதற்கு முன்னர் காணப்படும் தலையங்கம், 'உல்லாசப் பிரயாணமும் ஏற்றுமதிகளும் தொடர்புபட்ட கம்பனிகளின்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'உல்லாசப் பிரயாணமும் ஏற்றுமதிகளும் தொடர்புபட்ட ஆட்களின்' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 85அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) 'கம்பனி' என்னும் சொல் (ஆ) என்னும் பந்தியிற் தவிர வேறு எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக, 'ஆள்' என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(2) பந்தி (ஆ) என்பதில்,

(அ) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில், 'எந்தப் பணத்தொகை கொண்டுள்ளதோ அந்தவொரு பணத்தொகை என்றும்; அத்துடன்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'எந்தப் பணத்தொகை கொண்டுள்ளதோ அந்தவொரு பணத்தொகை என்னும்' சொற்களை இடுவதன்மூலமும்;;

(ஆ) அப்பந்தியின் (ii) என்னும் உட்பந்தியில், 'எந்தப் பணத்தொகை கொண்டுள்ளதோ அந்தப் பணத்தொகை எனவும்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'எந்தப் பணத்தொகை கொண்டுள்ளதோ அந்தப் பணத்தொகை, எனவும். அத்துடன்' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(iii) கம்பனியொன்றைத் தவிர எவரேனும் ஆளின் விடயத்தில், அந்த வரிமதிப்பீட்டாண்டுக்காக அந்த ஆளின் மொத்த இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் அவ்வாளின் ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை, 82 ஆம் பிரிவின் கீழ் அல்லது 83 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்தைக் கழித்த பின்னர், அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அவ்வாளினால் கொடுக்கற்பாலதான வருமான வரிக்கு எந்தப் பணத்தொகை கொண்டுள்ளதோ அந்தப் பணத்தொகை எனவும்."

(3) அப்பிரிவிற்கான ஓரக் குறிப்பில் 'ஏற்றுமதிகளில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளின்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'ஏற்றுமதிகளில் ஈடுபட்டுள்ள ஆட்களின்' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

'(2ஆ) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) அல்லது உட்பிரிவு (2அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் விவரம், அது ஏதேனும் மூலவளத்திலிருந்து வருமானத் தொகை தொடர்பிலானதாயின்—

(அ) வருமானத்தின் அத்தகைய மூலவளம் தொடர்பில் கிரமமான கணக்குகள் பேணப்படின், அத்தகைய கணக்குகள் மீது கணிக்கப்பட்ட தொகையாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வருமானத்தின் அத்தகைய மூலவளம் தொடர்பில் கிரமமான கணக்குகள் பேணப்படவில்லையாயின், விவரத் திரட்டைக் கொடுத்துதவுகின்ற ஆள் எந்தத் தொகை அந்த மூலவளத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் தொகையென நல்லெண்ணத்துடன் நம்புகின்றாரோ அந்தத் தொகையாதல் வேண்டும்'.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியில் 'இப்பந்தியின் நோக்கங்களுக்காக,' என்பதிலிருந்து அப்பந்தியின் இறுதி வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

'இப்பந்தியின் நோக்கங்களுக்காக 'வருமானவரி' என்பது—

(அ) 1985 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு கம்பனியொன்று தொடர்பாக 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அக்கம்பனியால் செலுத்தற்பாலதான வரியை உள்ளடக்குதல் ஆகாது; அத்துடன்

(ஆ) 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆள் தொடர்பில் (வதிவிடமொன்றினதும் அத்துடன் இச்சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் மானியத்தினதும் தேறிய ஆண்டுப் பெறுமதியைத் தவிர) இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவையும் அந்த வரிமதிப்பீட்

டாண்டிற்கு வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தைக் கணிப்பிடுகையில் எந்த இலாபங்களும் வருமானமும் கருத்திற் கொள்ளப்பட்டிருப்பின் அவை தொடர்பில் அத்தகைய விலக்களிப்பு அத்தகைய முற்போந்த ஆண்டில் இல்லாதொழிந்திருக்குமோ அந்த இலாபங்களும் வருமானமுமாகிய எவையேனும் இலாபங்களும் வருமானமும் (இதனகத்துப்பின்னர் 'முற்போந்த ஆண்டு' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டிற்காக அத்தகைய ஆளினால் செலுத்தற்பாலதான வருமானவரி என்று பொருள்படும்'.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.— முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவைத் திருத்துதல்.

'(ஈஈ) ஆதனத்தின் கைப்பற்றுகை எதுவும் பயனுறுத்தப்படவில்லையென்பது எவ்வாறிருப்பினும் எவரேனும் தவணை தவறியவருக்கெதிராக இப்பிரிவின் கீழ் நடவடிக்கை எடுப்பதில் எவரேனும் அலுவலரால் கூறப்பட்ட நியாயமான செலவுகளை அத்தகைய தவணை தவறியவரிடமிருந்து அறவிடுவது அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.'.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்.

'சொத்தக்காரர்' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:—

'பங்காண்மை' என்பது ஏதேனும் பங்காண்மையின் பங்காளர் ஒருவரின் பிரிக்கப்படற்பாலதான இலாபங்கள் அல்லது பிரிக்கப்படற்பாலதான நட்டம் வேறு எவரேனும் ஆளுடன் அல்லது பங்காண்மையுடன் பகிர்ந்துகொள்ளப்படும் ஏதேனும் கையளிப்பு, நம்பிக்கைப்பொறுப்புக் கொடை, உடன்படிக்கை, சாட்டுதல் உரிமை நிருணயம் அல்லது வேறு ஒழுங்கேற்பாடு எதனையும் உள்ளடக்குதல் வேண்டும் ;

23. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அவ்வட்டவணையின் பாகம் IV என்பதில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது— முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத்திருத்துதல்.

(1) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில் " 1985 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் " என்னும் சொற்களுக்கும் பதிலாக, "1985 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று ஆனால் 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் " என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பாகத்தின் முடிவில், பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் —

"(இ) 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு—

முதல் 200,000 ரூபாமீது—இல்லை
அடுத்த 50,000 ரூபாமீது—5 சதவீதம்
அடுத்த 50,000 ரூபாமீது—10 சதவீதம்
மீதியின்மீது—சதம் சதவீதம்.

கடந்த காலத் தையும் உள்ளடக்கும் பயன்.

24. (1) இச்சட்டத்தின் 7 (1) அத்துடன் 7 (2) என்னும் பிரிவுகளால் முதன்மைச் சட்ட வாக்கத்தின் 23(1) என்னும் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1987 மார்ச்சு 6 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 11 (1) அத்துடன் 11 (2) ஆகிய பிரிவுகளினால் முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 (2) (அது முதலாவது அட்டவணையின் 'ஈ' என்னும் பாகத்திற்குத் தொடர்புறும் அளவுக்கு) அத்துடன் 32 (3இ) என்னும் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1988 மார்ச்சு 25 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச் சட்டத்தின் 13 (2) என்னும் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 (1) (இ) என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1985 டிசெம்பர் 31 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 14 ஆம், அத்துடன் 11 (2) ஆம் பிரிவுகளினால் முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆ அத்துடன் 32 (2) என்னும் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1988 செத்தெம்பர் 8 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

25. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177; (வெளிநாடு) ரூபா 236; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.